செய்தி வெளியீடு: 05 நாள்:03/01/2008

# தமிழ் வளர்ச்சித் துறை
## திருவள்ளுவர் திருநாள் விழா 16.1.2008
### செய்திக் குறிப்பு
### சிறந்த நூல்களுக்குப் பரிசு

தமிழில் துறைதோறும் நூல்கள் வெளிவருவதை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழக அரசு ஆண்டுதோறும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தினைச் செயற்படுத்தி வருகிறது. தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு,வரப்பெறும் நூல்களுள் சிறந்த நூல்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, புதினம், மருத்துவம், தொழில் நுட்பம் முதலிய 31 வகைப்பாடுகளில் வெளிவந்த நூல்களில் ஒவ்வொரு வகைப்பாட்டிலும் சிறந்த நூல் தெரிவு செய்யப்பட்டுப் பரிசு வழங்கப்படுகிறது. பரிசு பெறும் நூல் ஒவ்வொன்றிற்கும் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. பரிசு பெறும் நூல்களைப் பதிப்பித்துள்ள பதிப்பகத்திற்கும் ரூ.2,000/– (இரண்டாயிரம் ரூபாய்) பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

இவ்வகையில் 2006 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களுள், சிறந்த நூல்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 29 வகைப்பாடுகளில் 42 நூலாசிரியர்களுக்கும், இந்நூல்களைப் பதிப்பித்த 23 பதிப்பகங்களுக்கும் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான அரசாணையை அரசு வெளியிட்டுள்ளது. பரிசு பெறும் நூல்கள், பதிப்பகங்கள் பற்றிய விவரம் வருமாறு :

**இணைப்புடன்:**